1973 நவம்பர் 26]

மொத்தம் 52.95 ஏக்கரில் 36.33 ஏக்கர் நிலங்களுக்கான ஈட்டுப் பணம் கடந்த 30—3—1973 அன்றும், மேலும் 0.90 ஏக்கருக்கான இழப்பீட்டுத் தொகை 25—7—1973 அன்றும் கொடுக்கப்பட்டு விட்டது. மீதமுள்ள நிலங்களுக்கான ஈட்டுத் தொகையும் அதிவிரைவில் தரப்பட்டுவிடும்.

முள்ளிப்பாடி வாய்க்கால் சீரமைப்பு

*** 399 வினா—திரு. சி. க. வடிவேலு :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், தொட்டியம் தொகுதியைச் சார்ந்த முள்ளிப்பாடி வாய்க்கால் சீரமைப்புத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. க. வடிவேலு : இந்த வாய்க்காலைச் சேர்ந்த விவசாயிகள் அந்தத் திட்டம் நீண்ட காலமாக வர வேண்டுமென்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதை மறு பரிசிலனை செய்து அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தத் திட்டம் 1959 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டது. அப்பொழுதே மதகுகள் கட்ட வேண்டும் என்று எந்தவிதமான குறிப்பும் செய்யவில்லை. இப்பொழுது கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டதினால், 30 குழாய் மதகுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டதாக அரசுக்குத் தகவல் இருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த முள்ளிப்பாடி வாய்க்கால் பகுதியில் தற்போது ஒரு போக சாகுபடிக்கு வாய்ப்பு இருக்கிறது. மதகு வேலைகள் விரைவாக கட்டி முடிக்கப்பட்டால் மேலே உள்ள பகுதிகள் இரண்டு போகம் சாகுபடி செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே, இந்த வேலையை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, விரைவாக முடிக்கப்படும் என்று நம்புகிறேன்.

பத்தரபள்ளி, மோர்தாஞ அணைக்கட்டுகள்

*** 400 வினு—திரு. நா. கிருட்டிணன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், குடியேற்றம் வட்டத்தில் (1) பத்தரபள்ளி, (2) மோர்தாஞ ஆகிய இடங்களில் அணைக்கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) மலட்டாற்றின் குறுக்கே பத்தரபள்ளி கிராமத்தின் அருகே நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் முன்னேடி ஆய்வு செய்யப்பட்டு, தற்போதைக்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. கௌண்டின்னிய நதியின் குறுக்கே மோர்தாஞ கிராமத்தின் அருகில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

முதலைமுத்துவாரி நீர்த் தேக்கம்

*** 401 வினு—திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் தாலுக்கா வல்லம் பகுதியில் உள்ள முதலைமுத்துவாரி அணைக்கட்டுத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) தஞ்சை வட்டத்தில் வல்லம் புதூர் கிராமத்தில் முதலைமுத்துவாரியின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் பாசனத் தலைமைப் பொறியாளரது பரிசீலனையில் உள்ளது. அது இன்னும் அரசு பரிசீலனை செய்யும் கட்டத்தை அடையவில்லை.